00012

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை - 2020/2021

**EPD3331/ESD1131** – முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக்கல்வி முன்னோக்கு

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 02.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. "இலங்கை ஆரம்பக்கல்வி மனிதவளம் தொடர்பாக பல்வேறு பிரச்சிகைகளை முகம் கொடுக்கின்றது" இப்பிரச்சினைகளைப் பட்டியலிடுக.
2. பிள்ளை மையக்கல்வியில் ஆசிரியரின் வகிப்பாங்கு யாது?
3. "குடும்பமொன்றின் பாரம்பரிய வகிப்பாங்கு தற்காலத்தில் மாற்றமடைந்துள்ளது" இம்மாற்றத்திற்கான **ஐந்து** (05) காரணிகளை பட்டியலிடுக.
4. இலங்கையில் ஆரம்பக் கல்வி மாணவர்களின் அடைவு குறைவாக இருப்பதற்காக காரணிகள் **ஐந்தினைப்** (05) பெயரிடுக.
5. விசேட நிலைமையின் கீழுள்ள பிள்ளைகளின் இயல்புகள் **ஐந்தினைப்** (05) பட்டியலிடுக.
6. "ஆயுத மோதல்களில் ஈடுபடும் 18 வயதுக்குட்பட்ட மனிதர்கள் குழந்தை இராணுவ வீரர்கள் எனப்படுவர்" இலங்கையில் குழந்தை இராணுவ வீரர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை?
7. இலங்கையில் 1997ஆம் ஆண்டு ஜனாதிபதி பணிக்குழுவால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி தொடர்பான நடவடிக்கைகள் எவை?
8. இலங்கையில் வீட்டு அடிப்படையிலான முன்பிள்ளைப் பருவ விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் எவை?

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** விசேட தேவையுடைய **இரண்டு** (02) வகையான பிள்ளைகளை விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** வெளித்தெரியும், வெளித்தெரியாத குறைபாடுகளை விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. "இலங்கையின் முறைசார் கல்விமுறையானது, விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு போதுமான கல்வி வாய்ப்புக்களை வழங்குகின்றது." இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? உமது விடையினை நியாயப்படுத்துக. (08 புள்ளிகள்)

10.
i. பிள்ளை மையக்கல்விக்கு பங்காற்றிய முக்கிய தத்துவவியலாளர்கள் நால்வரின் (04) பெயர்களை பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

ii. பிள்ளை மையக்கல்வி பற்றிய இரண்டு (02) முக்கிய தத்துவவியலாளர்களின் கருத்துக்களை விளக்குக. (16 புள்ளிகள்)

11. "ஆசிரியர் மையக்கல்வி முறையில் பிள்ளை மையக்கல்வியை நோக்கி நகர்தல் முக்கியமானதாகும்"
i. பிள்ளை மையக்கல்வி என்னும் பதத்தினை வரையறுக்க. (05 புள்ளிகள்)

ii. ஆசிரியர் மையக்கல்வியில் மாணவர் மையக்கல்வியை நோக்கி நகர்தல் ஏன் முக்கியமானது? (06 புள்ளிகள்)

iii. ஆசிரியர் மையக்கல்வி பிள்ளை மையக்கல்வி என்பவற்றுக்கிடையேயான வேறுபாடுகளை விளக்குக. (09 புள்ளிகள்)

12. "இலங்கையில் கட்டாயக்கல்வியில் வயதெல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது."
i. இலங்கையில் தற்போது கட்டாயமாக பாடசாலைக்கு செல்ல வேண்டிய வயது வீச்சு யாது? (04 புள்ளிகள்)

ii. இலங்கையில் கட்டாயக் கல்வி பெற வேண்டிய வயதில் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாது விடுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? (08 புள்ளிகள்)

iii. இலங்கை அரசாங்கம் கட்டாயக் கல்வி பெறும் வயதில் பாடசாலை செல்லாத பிள்ளைகள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் எவை? (08 புள்ளிகள்)

13. "கொவிட் - 19 ஆனது இலங்கையில் கல்விச் சூழலில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது."
i. கொவிட் - 19 தொற்றானது இலங்கையின் ஆரம்பக் கல்வியில் ஏற்படுத்திய பாதிப்புக்களைப் பட்டியலிடுக. (10 புள்ளிகள்)

ii. மேலே நீங்கள் குறிப்பிட்ட பாதிப்புக்களில் இருந்து விடுபட பொருத்தமான விதந்துரைப்புக்களை முன்மொழிக. (10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -